மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–06.

ந.க.எண்.6400/எஃப்4/2023 நாள்.26.10.2023.

பொருள் பயிற்சி – முதுகலை ஆசிரியர்களுக்கான பயிற்சி – உயர் மற்றும் மேல்நிலை வகுப்புகளுக்கான இயற்பியல், வேதியியல், கணிதம் மற்றும் உயிரியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மாவட்டங்களில் பயிற்சி வழங்குதல் – முதன்மைக் கருத்தாளர்களுக்கான பயிற்சி சென்னையில் 06.11.2023 & 07.11.2023 மற்றும் 16.11.2023 முதல் 18.11.2023 முடிய நடைபெறுதல் – பங்கேற்பாளர்களை பணிவிடுவிப்பு செய்ய கோருதல் – தொடர்பாக.

பார்வை
1. சென்னை–06, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, மாநிலத்திட்ட இயக்ககத்திடமிருந்து பெறப்பட்ட நிதி ஒதுக்கீடு
2. இந்நிறுவன இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.6400/எஃப்4/2023 நாள்.26.09.2023

------

2024–2025 ஆம் கல்வியாண்டில் மேல்நிலை வகுப்பு பாடங்களுக்கு மாணவர் மைய கற்றல் அனுபவங்களை வழங்கும் விதமாக திறன்வளர்ப் பயிற்சியை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் உள்ள முதுநிலை விரிவுரையாளர்கள் மற்றும் விரிவுரையாளர்களுடன் அனைத்து மாவட்டங்களில் பணிபுரியும் முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு வழங்கிட முதன்மைக் கருத்தாளர்களுக்கான பயிற்சியினை சென்னையில் நடத்திட மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பணிமனையில் மேல் நிலை வகுப் களுக்கான (11 மற்றும் 12 ஆம் வகுப்பு வரை) இரண்டாம் கட்டமாக வணிகவியல்/ கணக்கு பதிவியல், ஆங்கிலம், பொருளியல், வரலாறு மற்றும் தமிழ் பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு, அனைத்து மாவட்டங்களிலும் வழங்கிடும் வகையில் முதன்மைக் கருத்தாளர்களுக்கான பயிற்சி சென்னையில் 06.11.2023 & 07.11.2023 மற்றும் 16.11.2023 முதல் 18.11.2023 முடிய திறன்வளர்ப் பயிற்சியாக DPI வளாகத்தில் உள்ள SIEMAT HALL–இல் கீழ்கண்டவாறு நடைபெற உள்ளது. எனவே,

இணைப்பில் உள்ள தெரிவு செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களை முதன்மைக் கருத்தாளர்களாக செயல்பட உரிய நாட்களில் பணிவிடுப்பு செய்து அனுப்புமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் ளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

| வ.எண். | பாடம் | பணிமனைநாள். | பணிமனை நடைபெறும் இடம் நேரம் மற்றும் தங்குமிடம் |
|---|---|---|---|
| 1. | வணிகவியல் / கணக்கு பதிவியல் | 06.11.2023 | காலை 09.30 மணி முதல் மாலை 05.45 மணி வரை SIEMAT HALL, DPI Campus, Chennai – 06. |
| 2. | பொருளியல் | 07.11.2023 | |
| 3. | ஆங்கிலம் | 16.11.2023 | |
| 4. | வரலாறு | 17.11.2023 | |
| 5. | தமிழ் | 18.11.2023 | |

இப்பயிற்சியினைத் தொடர்ந்து, அனைத்து மாவட்டங்களிலும் உரிய முதன்மைக் கருத்தாளர்களைக் கொண்டு பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளது. சென்னையில் பயிற்சி முடிந்தவுடன் அடுத்த வாரம் முதல், வாரத்திற்கு ஒரு பாடம் வீதமாக, ஐந்து வாரங்களில் ஐந்து பாடங்களுக்கு பயிற்சியினை நடத்திடவும், குழு ஒன்றிற்கு 50 நபர்களுக்கு மிகாமல் திட்டமிட்டு, இப்பயிற்சியினை நடத்திடவும், ஆசிரியர்கள் பயிற்சிக்கு வந்து செல்ல ஏதுவாக போக்குவரத்து வசதி, தேவையான இட வசதி, காற்றோட்டம், கழிப்பிட வசதி அமைந்துள்ள மையத்தினை தெரிவு செய்துகொள்ளுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

மாவட்டங்களில் கருத்தாளர்களாக பணிபுரிபவர்களுக்கு மதிப்பூதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.1,000/- அனுமதித்து வழங்கிடவும், கருத்தாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பயிற்சி ஒருங்கிணைப்பாளர்களுக்கு மதிய உணவு மற்றும் சிற்றுண்டி செலவினத்தினை நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.150/- வீதமும், கருத்தாளர்கள், பங்கேற்பாளர்கள் மற்றும் பயிற்சி ஒருங்கிணைப்பாளர்களுக்கு உள்ளூர் போக்குவரத்துப்படி மட்டும் ரூ.100/- ஆகவும், அனுமதித்து வழங்கிடவும்,

இப்பணிமனையினை திறம்படும் வகையில் மாவட்டங்களில் செயல்படுத்திட முதன்மைக்கல்வி அலுவலர்களுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும், பணிமனையில் பங்கேற்கவுள்ள முதன்மைக் கருத்தாளர்கள் தங்களுடைய பாடத்திற்கு ஏற்றவாறு பாடநூல்களை உடன் எடுத்து வருமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலருடன் இணைந்து பயிற்சி மையத்தினை தெரிவு செய்துகொள்ளவும், பணிமனை செலவினமானது முதுகலை ஆசிரியர்களுக்கான திறன்மேம்பாட்டு பயிற்சிக்கு IFHRMS இன் வாயிலாக தங்களுக்கு வழங்கப்பட்ட மொத்தத் தொகையில் முதல் அரையாண்டு தொகை செலவிடப்பட்டுள்ள நிலையில், அடுத்த காலாண்டுத் தொகையிலிருந்து இப்பயிற்சிக்கு செலவிடுதல் வேண்டும் என அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மாநில முதன்மைக் கருத்தாளர்களுக்கான சென்னை பயிற்சியின் ஒருங்கிணைப்பாளராக இந்நிறுவன விரிவுரையாளர் ரெ. மலர்கொடி என்பார் செயல்படுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு : தெரிவு செய்யப்பட்ட முதன்மைக் கருத்தாளர்களின் பெயர் பட்டியல்.

இயக்குநர்

பெறுநர்

1. அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கு நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
2. அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களுக்கு நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.

நகல்

1. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்தப் பள்ளிக்கல்வி, சென்னை –06 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை–6 அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.